# இலங்கை:

## கிராமிய நகர்புற முதலீட்டுச்

## சூழலைமேம்படுத்தல

இலங்கை கணக்கீடு புள்ளிவிபர திணைக்களத்தினதும்

வரையறுக்கப்பட்ட ஏ. சி. நீல்சன் லங்கா (தனியார்) நிறுவனத்தினதும்

உதவியினால் ஆசிய அபிவிருத்தி வங்கியினாலும் உலக வங்கியினாலும்

நகர்புற கிராமிய தாபனங்களிடையே நடாத்தப்பட்ட ஆய்வின்

அடிப்படையில் ஒரு முதலீட்டுச் சூழல் மதிப்பீடு

2005

# நிறைவேற்று ஆய்வறிக்கை

*கடந்த 25 ஆண்டுகளாக இலங்கை நாடானது தனது வர்த்தக, கைத்தொழில் கட்டமைப்புகளில்* பாரிய மாற்றங்களை சந்தித்து வருகிறது. 1978க்கும் 1995க்கும் இடையில் இலங்கையில் ஆடைக் கைத்தொழில் பகுதியின் ஏற்றுமதியானது 32% மாக அதிகரித்தது. இதற்கு 1970களின் பிற்பகுதியில் ஏற்படுத்தப்பட்ட தாராள திறந்த வியாபாரக் கொள்கையும் மற்றும் பொருளாதார திட்டங்களும் இப்பாரிய மாற்றத்திற்கு உதவின. இதற்கு மேலாக மனித அபிவிருத்திக்கு இது அளித்த பங்களிப்பானது பயிற்றப்பட்ட தொழிலாளர் அமைப்பொன்றை உருவாக்கியதோடு குறைந்த வருமானம் பெறும் நாடுகள் மத்தியில் ஒரு மாற்றத்தை உருவாக்கியது.

*இவ் வளர்ச்சி ஒரு பெரும் வெற்றியாகக் காணப்பட்டாலும் மற்றைய கிழக்காசிய நாடுகளுடன்* ஒப்பிடுகையில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியும், வறுமைக்குறைப்பும் சமநிலைப்படுத்தப்படவில்லை. 1960களில் இந் நாட்டின் தனிமனித வருமானமானது கொரியா, தாய்லாந்து, மலேசியா போன்ற நாடுகளுடன் ஒத்திருந்தாலும் இன்று தாய்லாந்தின் தனிநபர் வருமானத்தின் அரைப்பங்கிற்கும் குறைவாகவும் மலேசியா, கொரியா ஆகிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இதைவிட மிகவும் பின்தங்கிய நிலையிலும் உள்ளது. வறுமைக் குறைப்பின் வெற்றியோ இந்நாட்டில் ஆச்சரியப்படும் விதத்தில் மிகவும் குறைவாக உள்ளது. வறுமை புள்ளியீட்டு விபரமானது இன்னமும் அதன் மிக உயர்ந்த நிலையான 22.7%மாகவே உள்ளது. அதேவேளை மிகவும் கவலைத்தருகின்ற விடயம் என்னவெனில் எல்லாப் பிராந்தியங்களிலும் விரிவு படுத்தப்பட்ட பொருளாதார வளர்ச்சி இல்லாது வளர்ச்சியானது மேல் மாகாணத்தை தழுவியதாகவே உள்ளது. கிராமியப்பகுதிகளின் வளர்ச்சி மிகவும் பின்தங்கியுள்ளது. ஆகவே இன்று இலங்கையின் வறுமை நிலையானது ஒரு கிராமிய கண்நோட்டத்தை கொண்டுள்ளது.

*இலங்கையின் முதலீட்டு சூழலுக்கெதிராக உள்ள தடைகள் எவை? நகர் புறங்களிலும் கிராமிய சூழலிலும் உள்ள தாபனங்களின் மத்தியில் 2003ம் 2004ம் ஆண்டுகளில்* நடாத்தப்பட்ட இரு ஆய்வுகளின்படி கிடைக்கப்பெற்ற தரவுகளை நுணுக்கமாக ஆராய்ந்ததில் இதற்கு விடை கிட்டியது. நகர் புற ஆய்வானது புடவைக் கைத்தொழில், ஆடைக் கைத்தெழில். உணவு குடிபான கைத்தொழில், இறப்பர் உற்பத்திகள் கைத்தொழில், கைத்தொழில் உபகரணங்கள் செய்யும் நகர்புற 449உற்பத்தி தொழிலகங்களிலும், உல்லாசத்துறை, தகவல் தொழில்நுட்பத் துறையிலுள்ள 94 தாபனங்களிலும் நடாத்தப்பட்டது. அதேவேளை விவசாயமல்லாத தொழில் முறைகளை கையாளும் 1327 தாபனங்களிலும் விவசாயமல்லாத மற்ற தொழில்களில்[1] பங்கு பற்றாத 555 குடும்பங்களையும் கிராமிய முதலீட்டுச் சூழலாய்வு உள்ளடக்கியது. இலங்கையில் அனேகமான கிராமியத் தாபனங்கள் வீட்டிற்கு வெளியே நிலைக்கொண்டும் அவை சேவை சம்பந்தப் பகுதிகளில் சிறிய அளவிலான வியாபாரத்தையோ அல்லது உற்பத்தியையோ கொண்டுள்ளன. இத்தாபனங்கள் மிகவும் சிறியனவாகவும் 2.4 பேரை வேலைக்கு கொண்டுள்ளதாகவும் இவர்களில் அனேகர் குடும்ப அங்கத்தினராகவும் இருப்பதைக் கண்டுள்ளது.

இவ் ஆய்வே இலங்கை நாட்டில் நடாத்தப்பட்ட இவ்வகை ஆய்வுகளில் முதலாவதில் ஒன்றாகும். இது வியாபார சூழலையும் கிராமியப் பகுதிகளில் துணிகரமான முதலீட்டு ஆய்வையும் கொண்டுள்ளது. வறுமைக் குறைப்பிற்கு பெருந்தோட்ட விவசாயமல்லாத மற்றைய பகுதிகளில் வளர்ச்சியை உண்டுபண்ணுவது மிகவும் அத்தியாவசியமானது. இந் நாட்டில் 85மூ மான ஜனங்கள் கிராமியப் பகுதிகளிலேயே வாழ்கின்றனர். மேலும் விவசாயமல்லாத மற்ற வழிகளில் பெறப்படும் வருமானமானது கிராமிய மக்களின் வருமானத்தின் அரைப்பங்கிற்கு மேலாக உள்ள அதே வேளையில் விவசாயத்தின் மூலம் 2003 ம் ஆண்டில் பெறப்பட்ட வருமானம் ரூபா185 பில்லியன்களாகும். இது கிராமிய

குடும்பங்களினவருமானத்தின் 12% மாகவோ அல்லது 2003 ஆண்டின் மொத்த அபிவிருத்தி இலக்கின் 78% மாகவோ இருக்கின்றது.

## ஆட்சியில் பலமானதும், கட்டமைப்பிலும் நிதியிலும் பலயீனமானதும்

*நகர்புற, கிராமிய முதலீட்டுச் சூழலில் வித்தியாசங்கள் காணப்படினும், கட்டமைப்பின்* தரக்குறைப்பாட்டினால் (விசேசமாக சக்தியும் போக்குவரத்தும்) நிதி குறைப்பாடும் நகர்புற கிராமிய உற்பத்தி தொழிலகங்களுக்கு பெரும் தடையாக உள்ளன (படங்கள் 1,2).

### *ஆட்சியில் பலமானது*

*அயல் நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் ஆட்சியாளர்கள் மிகக் கண்டிப்பான சடங்கு முறைகளால் ஏற்படும் தாமதத்தை குறைப்பதில் வெற்றி கண்டும், நிர்வாக கட்டமைப்புகளை சீர்படுத்தி அவை இனியும் வியாபாரம் செய்வதில் தடங்கலாய் இராதபடிக்கு செய்வதில் வெற்றி கண்டும் உள்ளனர்.* புதிய கிராமிய நகர்புற தொழிலகங்களை பதிவுசெய்தல் இலகுவாக உள்ளது உண்மையை கூறின் கிராமிய வியாபார நிலையங்களில் அரைப்பங்கிற்கு மேலானவை பதிவு செய்யப்பட்டவைகளாக உள்ளன. இவ்வெற்றியான ஆட்சி முறையமைப்பில் சமாதானமும் அரசியல் ஸ்திரத்தன்மையும் மாத்திரம் குறைபாடுள்ளதாக காணப்படுகின்றது.

படம் 1

**நகர்புற பிரதான தடங்கல்கள் 5**




| | | | | | |
|---|---|---|---|---|---|
| கிராமிய நிலை | 1வது | 2வது | 3வது | 4வது | 5வது |
| நகர்புற நிலை | 5வது | 10வது | இல்லை | 2வது | 15வது |

மூலம்: உலக வங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும்நடாத்திய இலங்கைக்கான முதலீட்டுச் சூழல் ஆய்வு 2004

### *கட்டமைப்பில் பலயீனமானது*

*கிராமிய, நகர்புற தாபனங்களுக்கும் மின்சக்தி ஒன்றே பிரதான தடையாகவும், நடத்து செலவீனங்கள் இவ்விருதர தாபனங்களுக்கும் கூடுதலாகவும் காணப்படுகிறது.* மேல் மாகாணத்தில் மின்சக்கதி

படம் 2

**கிராமிய பிரதான தடங்கல்கள் 5 நகர்புற வீதம்**




| | | | | | |
|---|---|---|---|---|---|
| நகர்புற நிலை | 9வது | 4வது | 12வது | இல்லை | 1வது |
| கிராமிய நிலை | 1வது | 2வது | 3வது | 4வது | 5வது |

மூலம் : உலக வங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும்நடாத்திய இலங்கைக்கான முதலீட்டுச் சூழல் ஆய்வு 2004

இலகுவாக பெறக்கூடியதாகவும் ஊவா போன்ற பின்தங்கிய மாகாணங்களில் மின்சக்தி மிகக் குறைந்த அளவிலும் விநியோகிக்கப்படுவதால் இலகுவாக பெற முடியாததாகவும் உள்ளது. தேசிய மின்சக்தி வலைபின்னலிலிருந்து 70% த்திற்கும் குறைவானதாகவே கிராமிய தாபனங்கள் மின்சக்தியை பயன்படத்துகின்றன. மின்சக்தி தாராளமாக கிடைக்கும் இடங்களில் கூட அதிகூடிய விலையினாலும் நம்பிக்கையற்ற மின் விநியோகத்தினாலும் தமது உற்பத்திச் செலவு மிகக் கூடுதலானது எனக் கண்டுள்ளனர். இதனால் இலங்கையின் நகர்புற உற்பத்தி தொழிலகங்களில் 75% மானவை தம்முடைய செந்த மின் உற்பத்தி சாதனங்களைக் கொண்டுள்ளனர். இது மற்றைய போட்டி ஆசிய நாடுகளின் வீதத்தை விட அதிகமாகும் (உதாரணத்திற்கு சீனாவில் 27%) சராசரியாக ஒரு மின் உற்பத்தி சாதனமானது அவர்களின் மொத்த உற்பத்தி முதலீட்டுச் செலவீனத்தில் 12% மாகும். இவ் உற்பத்தி தாபனங்களின் சக்தி இதனால் குறைவதோடு மீழ் முதலீட்டையும் குறைக்கின்றது. நம்பிக்கையற்ற மின் இணைப்பானது நகர் புற உற்பத்தி தாபனங்களில் 50% தைக் குறைத்தும் தேசிய வலைபின்னலுடன் இணைக்கப்படாத கிராமிய தொழிலகங்களின் சக்தியை 25% மாகவும் குறைத்துள்ளன. மின் சக்தி குறைப்பாடானது கிராமிய குடும்பங்கள் புதிய தாபனங்களை துவங்க தடையாகவுள்ளது.

*கிராமிய தாபனங்களுக்கு போக்குவரத்தானது மிக முக்கியமான தனித் தடையாகவுள்ளது.* இது நகர் புற உற்பத்தி தாபனங்களுக்குக் கூட முக்கியத் தடையாகவும் எதிர்கால உல்லாச பிரயாணத் துறைக்கும் ஒரு தடங்களாக உள்ளது. கிராமிய தாபனங்களில் 1/3 பங்கினர் தாம் ஒரு வியாபாரத்தைத் துவங்குவதற்கோ அல்லது இருக்கும் வியாபாரத்தை நடாத்துவதற்கோ இது தடையாக இருப்பதாக கூறுகின்றனர். பிராந்திய ரீதியில் பார்க்கும் போது இலங்கை நாடானது மிகவும் அடர்த்தியான பாதை வலைப் பின்னலை கொண்டுள்ளது. ஆயினும் பாதைகளின் தரத்தை ஒப்பிடுகையில் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. பாவிய வீதிகளில் 90% மானவை பராமரிப்பின்மையினால் மிகவும் மோசமான நிலையிலுள்ளன.

மின்சாரத்தை போன்று பிராந்தியங்களுக்கிடையில் பாரிய வித்தியாசங்கள் காணப்படுகின்றன. இதில் மேல் மாகாணமானது மிகச் சிறந்த பாதைகளைக் கொண்டும் சிறந்த போக்குவரத்து வசதிகளையும் கொண்டுள்ளது. தரமற்ற பாதைகளும், போக்குவரத்தின்மையும் கிராமிய தாபனங்களுக்கு சந்தைப்படுத்துதல் சிக்கல் நிறைந்ததாகவும், போக்குவரத்து செலவைக் கூட்டுவதால் உற்பத்தியைக் குறைக்கின்றன. நகர் புற தாபனங்களில் கால் பங்கினர் போக்குவரத்துப் பிரச்சினைக்குள்ளாவதால் அவைகளின் மொத்த விற்பனை தொகையின் 7% தை இழக்கின்றனர் மின்சாரத்திற்கும், போக்குவரத்திற்கும் எதிர்மாறாக தொலைத்தொடர்பு பகுதியானது முதலில் சீர்திருத்தப்பட்டு சிறந்த சேவையை வழங்கினாலும் இணைப்பு ஏற்படுத்தப்படும் கால அவகாசம் சீனா, மலேசியா போன்ற நாடுகளை விட கூடுதலாக இருக்கின்றது.

## *செலவினம் கூடியதும் கடன்கள் பெறும் வழிகள் குறைவானதுனம்*

*நிதி பெறுவதற்கான செலவீனமானது நகர்புற,* கிராமிய தாபனங்களுக்கு பொதுவான தடையாக உள்ளது. நகர்புற தாபனங்களின் 1/3 பங்கினரும், கிராமிய தாபனங்களில் 2/3 பங்கினரும் நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக செலவழிக்கப்படும் செலவானது மிகக் கூடிய தடையாக உள்ளதென கூறினர்.

அதேவேளை புதிதாக ஆரம்பிக்கப்படும் கிராமிய தாபனங்கள் நிதிப் பெற்றுக் கொள்வதில் பாரிய கஷ்டங்களை ஏதிர் நோக்குகின்றனர். சிறிய நகர்புற தாபனங்கள் தாம் பெற்ற நிதிக்காக செலுத்தும் வட்டி வீதம் 18ஆகவும் பாரிய தொழிலகங்களின் வட்டி வீதம் 12ஆகவும் உள்ளதைக் காண்கிறோம். கிராமிய தாபனங்கள் குறைந்தளவிலான வட்டி வீதமாக 14.5%தை வட்டியாக செலுத்துகின்றனர். இப்படிப்பட்ட இக் கிராமிய தாபனங்களுக்கு இக் குறைந்த வட்டி வீதம் சமுர்த்தி வங்கி போன்ற தேசிய நிதி தாபனங்களிலிருந்தும் மற்றும் சிறிய நிதித் தாபனங்களிலிருந்தும் (MFI) பெறுகின்றனர். மானியங்கள் இத் தாபனங்களின் எதிர்காலத்தை பதிக்கக் கூடியதாக உள்ளன. இப்படிப்பட்ட குழப்பங்களினால் வட்டி வீதத்தை செலுத்துவதில் பாரிய வேறுபாடுகளை காணக்கூடியதாக உள்ளது.

*கிராமிய வியாபார தாபனங்கள் வழமையான நிதி வழிமுறைகள் மூலம் நிதியைப் பெறுவது மிகவும் குறைவாக உள்ளபடியால் வெளிநிதிகளைப் பெற்றுக் கொள்கின்றன.* கிராமங்களில் உள்ள தாபனங்கள் முதலீடுகளின் 43%தை உள்ளும் 35% மாளவைகள் குடும்ப அங்கத்தவரிடமிருந்தும் பெற்றுக் கொள்கின்றனர். நிதி வழங்கும் தாபனங்கள் கிராமப்புறங்களில் இருந்தாலும் இவற்றிலிருந்து பணம் பெறுவது மிகக் குறைவாகக் காணப்படுகிறது. தனியார் வங்கிகளிடமிருந்து பெரும் கிராமிய முதலீட்டாளர்கள் மாத்திரம் நிதியினை (2%) பெற்றுக் கொள்கின்றனர். வெளி முதலீட்டு குறைப்பாட்டினால் முன்னேறும் சந்தர்ப்பங்கள் அவர்களின் கைகளிலிருந்து நழுவி செல்கின்றன. நகர்புற உற்பத்தியாளர்கள் மத்தியில் கூட சிறு உற்பத்தியாளர்கள் பாரிய முதலீட்டாளர்களை போல நிதி பெற முடியாதுள்ளது இந் நிலையே சிறு தாபனங்கள் உள்வாரியான நிதியிலும், வாடகைக்கமர்த்தலிலும் குடும்ப அங்கத்தவர்களிடையே நிதிக்காக ஏன் தங்கியுள்ளனர் எனவும் அறியக்கூடியதாயுள்ளது.

ஈடுவைக்கும் பொருள் கடன் பெறுவதற்கு ஊக்குவிக்கின்றது. நகர்புற உற்பத்தியாளர்கள் மத்தியில் நடாத்திய ஆய்வின் வெளியீடுகள் இலகுவில் வங்கி கடன் பெறுவதற்கும் கூடிய உற்பத்தியை கூட்டுவதற்குமிடையில் ஒரு தொடர்பு இல்லை எனக்காட்டுகிறது. இதற்கு முக்கிய காரணம் வங்கிகள் நல்ல வெளியீடுள்ள விண்ணப்பங்களை தரம்பிரித்தறிய முடியாதவையாய் இருப்பதும் அவை கடன் விண்ணப்பங்களை அனுமதிப்பதில் ஈடுவைக்கும் பொருளின் பெறுமதியே விண்ணப்பங்களை அனுமதிப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன. கிராமியத் தாபனங்கள் கடன் பெற காணி ஈடு அத்தியாவசியமாகிறது ஆயினும் காணிகள் கூடிய பங்குதாரர்கள் உள்ளதும், அரச உரிமையாக உள்ளதும், சரியான உரிமையாளரை அடையாளங்காட்ட முடியாமலிருப்பதும், காணி பரிமாறமுடியாதிருத்தலும் அனேக கிராமிய தாபனங்களுக்கு காணி ஈடுவைத்தலானது மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட சந்தர்ப்பமாக உள்ளன.

## இலங்கையின் முதலீட்டுச் சூழலும் வெளிவாரி பொருளாதாரமும்

*1970களின் பிற்பகுதிகளில் ஏற்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கையானது ஏற்றுமதியைக் கூட்டி அதிக நன்மை கிடைக்க உதவிற்று. எமது ஆய்வு அறிக்கைகள் பன்நாட்டு ஒத்துழைப்புடன் அதிக நன்மையை பெற்றதென கண்டுள்ளன.* ஏற்றுமதி தாபனங்கள் கூட “ஏற்றுமதியின் மூலம் படிப்பினை” என்ற அனுமானத்தின் மூலம் கூடிய விற்பனையையும் முதலீட்டு வளர்ச்சியையும், எவ்வளவுக்கெவ்வளவு காலத்திற்கு ஏற்றுமதி செய்தார்களோ அவ்வளவுக்கவ்வளவு உற்பத்தியை பெருக்கக் கூடியதாக இருந்தனர். இலங்கையின் உற்பத்தித் தாபனங்கள் புதிய இயந்திரங்களை கொள்வனவு செய்வதன் மூலமும், முக்கிய பெறுப்புகளுக்கு உரியவர்களை ஒப்பந்த அடிப்படையில் தருவிப்பதன் மூலமும் கைத்தொழில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றனர். திறந்த பொருளாதாரக் கொள்கையானது புதிய இயந்திர சாதனங்கள் இறக்குமதி செய்ய வழிஅமைத்துக் கொடுத்துள்ளது. வெளிநாட்டு ஊழியர்கள் அத்தாபன ஊழியர் மத்தியில் இருக்குமிடத்து அவற்றின் வெளிப்பாடுகள் சிறந்தனவாக உள்ளன.

### *சர்வதேசபோட்டித்தன்மையில் உள்ள முக்கிய பகுதிகள்*

இலங்கை நாடானது வியாபார வெளியீட்டின் நன்மைகளை அனுபவித்தாலும் வெளிநாட்டு நேரடி முதலீட்டை (FDI) கவர்ந்திழுக்க தவறிவிட்டது. ஆசியாவின் மற்றைய பொருளாதார வளர்முக நாடுகளில் உள்ளதை விட இலங்கையின் முதலீட்டு ஊக்குவிப்பு சபை (BOI) மூலமாக கூடுதலான நன்மைகளை அளித்திருந்தும் கூட நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் ஓட்டமானது, மிகக் குறைவாகவே காணப்படுகிறது. சீனா, மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் ஓட்டமானது மொத்த அபிவிருத்தி இலக்கின் 3% மாக இருக்கும்வேளை இலங்கையில் 1.3% மாக 1990 முதல் 2002ம் ஆண்டு வரை இருந்தது. பன்நாட்டு தாபனங்கள் முதலிடும்போது அவற்றின் வெளியீட்டு வளர்ச்சிக்குரிய சந்தர்பங்களையும் பரந்த நோக்கில் நோக்குகின்றன. அவற்றின் அனேக

காரணிகளில் இலங்கை சிறந்ததாக காணப்படுகின்றது. பயிற்றப்பட்ட ஊழியர் சக்தி, கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டிய காலதாமதத்தை வெகுவாக குறைந்தும், ஏனைய அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுடன் ஒப்பிடும் போது ஊழல் குறைவாகவும் காணப்படுகிறது. இந் நாட்டின் துறைமுக சேவைகள், சுங்க இலாகா சேவைகள் சீனா, இந்தியா போன்ற போட்டி நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகசிறந்தாக இருந்தாலும் மேலும் அதை திறனாக்கி கூடிய லாபத்தை பெற உதவலாம். ஆயினும் இந் நாட்டில் அரசியல் ஸ்திரமற்ற தன்மையும் பொருளாதார நம்பிக்கையற்ற தன்மையும், தொழில் சட்ட திட்டங்களின் இறுக்கத்தன்மையும், தொழிலாளர் சட்ட திட்டங்களில் நம்பிக்கையற்ற தன்மையும் அவற்றின் கட்டமைப்பில் தரக்குறைப்பாடு ஆகிய பகுதிகள் நேரடி முதலீட்டை சோர்வடைய செய்கின்றன. எமது ஆய்வின் படி கண்டுபிடிக்கப்பட்ட உண்மை என்னவெனில் (BOI) முதலீட்டு ஊக்குவிப்பு சபையானது பன்நாட்டு முதலீட்டு தாபனங்களை இப் பிரச்சினையிலிருந்து வேறுபடுத்த தவறியுள்ளமையும் நேரடி முதலீட்டை இட்ட (BOI) முதலீட்டு ஊக்குவிப்பு சபைக்கு உட்பட்ட தாபனங்களின் வெளியீடு குறையப்பட்டிருந்தது.

வியாபார சூழலை மேம்படுத்த நாம் எடுக்கவேண்டிய நடைமுறை என்னவெனில் இந் நாட்டில் ஒரு அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தலாகும். 2001ல் இருந்து மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் செய்த பின் ஒரு பாரிய மாற்றத்தை உண்டுபண்ணியிருந்தாலும் இந் நாடானது உலகிலுள்ள அதி அரசியல் ஸ்திரமற்ற நாடுகளின் பட்டியலில் உள்ளது. இச் சமாதான ஒப்பந்தத்தில் வடகிழக்கிற்கு அதிக நன்மை கிட்டாவிட்டாலும் முழு நாட்டின் பொருளாதாரத்தில் ஒரு நன்மை ஏற்பட்டு, வெளிநாட்டு நேரடி முதலீடுகளை (FDI) கவர்திழுத்தலும் கூடிய காப்புறுதி கட்டணங்களிலிருந்து விடுபடுதலும் பெரும் நன்மையாக தாபனங்களுக்கு இருந்தன.

*1983ல் இருந்து 2001 வரை இலங்கையில் நடந்த உள்நாட்டு போருக்கு மேலாக கடந்த 4 ஆண்டுகளில் 3 வெவ்வேறு அரசுகள் ஆட்சி செய்துள்ளன.* நகர்புற உற்பத்தியாளர்களின் 1/3 விகிதமானோர் (கிராமிய தாபனங்களில் 5% க்கும் குறைவானவர்கள்) கருத்து படி பொருளாதார, மற்றும் கட்டுப்பாடுகளில் நம்பிக்கையற்ற தன்மையானது பிரதான வியாபாரத் தடங்களாக உள்ளது எனக்கூறினர். நகர்புற உற்பத்தியாளர்கள் இந்த தடங்கள் தமது உற்பத்திக்கு மின்சக்திக்கு அடுத்ததாக உள்ள இரண்டாவது பிரதான தடங்களாக இருப்பதாக கருதுகின்றனர் (படம் 1). 30% மான நகர்புற உற்பத்தி தாபனங்கள், பாரிய பொருளாதார ஸ்திரமின்மையானது பெரும் அல்லது பாரிய வியாபார தடங்களாக இருப்பதாக எண்ணுகின்றன. 4 ஆண்டுகளில் ஏற்பட்ட ஆட்சி மாற்றங்கள் திட்டமிடலில் தடங்களை ஏற்படுத்தியபடியால் மறுசீரமைப்பின் வேகத்தை தாக்கிற்று. 2003ம் ஆண்டின் கடைசிப் பகுதியில் இலங்கையில் அரசியல் ஸ்திரமற்ற தன்மை மேலெழுந்தபடியினால் இந்நாட்டு அரசினால் முக்கிய ஸ்தலத்தைப் பெற ஏற்படுத்திய திட்டங்களை சற்றே ஒத்தி வைக்கவேண்டியதாயிற்று.

மற்ற போட்டி ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் தொழிற் சட்டங்கள் முதலீட்டாளருக்கு நம்பிக்கையற்ற தன்மையினை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளன. சாதாரணமாக உலக நாடுகளில் உள்ளதைவிட வேலையினின்று நிறுத்தும் போது கொடுபடவேண்டிய கட்டணமானது பல மடங்கு கூடுதலாகும். நகர்புற உற்பத்தியாளர்கள் மத்தியில் தொழிற் சட்டமானது தமது நடவடிக்கைகளை தடங்கள் செய்யும் 5 பிரதான காரணங்களில் ஒன்றாக கணிக்கின்றனர். இந் நம்பிக்கையற்ற தன்மையானது, முதலீட்டையிட உற்சாகமிழக்கச் செய்யும்வேளை, வேலையற்றோரைக் கூட்டுகிறது. இதில் வேலையிலிருந்து நிறுத்தும் 1971ம் சட்டமே (TEWA) மிகவும் மோசமானதாகும். இச் சட்டத்தினால் வேலையாட்களை நிற்பாட்டவோ அல்லது குறைக்கவோ கஷ்டமாகின்றது. தாபனங்கள் இச்சட்டத்தைவெல்ல சமயாசமய வேலையாட்களை எடுப்பதன் மூலம் மெல்ல முயற்சிக்கலாம். ஆயினும் எவ்வளவுக்கெவ்வளவு சமயாசமய ஊழியர் எண்ணிக்கை கூடுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதன் உற்பத்தி வீதம் குறைகிறதென எமது ஆய்வு எடுத்தியம்புகின்றது.

## *பிரதான ஏற்றுமதி பிரிவிற்கு ஏற்படும் சவால்களும் அவற்றின் நடவடிக்கைகளும்*

இலங்கையின் சிறிய திறந்த பொருளாதாரமானது ஊக்குவிக்கப்பட்ட ஏற்றமதி வளர்ச்சியிலேயே கூடிய வீதம் தங்கியுள்ளது. பன் நூல் இழை உடன்பாட்டின் (MFA)கால முடிவிற்கு பின் ஒருமுகப்படுத்தப்பட்ட ஏற்றுமதியானது வீழ்வதால் புதிய சந்தைகளை தேடவேண்டிய சவால் உருவெடுத்துள்ளது. இதனால் மேலும் ஊக்குவிக்கக்கூடிய நல்ல முதலீட்டுச் சூழலை ஏற்படுத்தியும், போட்டி சூழலில் ஆடைத் தொழில் பகுதியை தக்க வைக்கவும், பன்முகப்படுத்தப்பட்ட ஏற்றுமதிக்கு ஊக்குவிப்பதாயும் அமைய வேண்டும்.

இலங்கையின் ஆடைக்கைத்தொழிலின் அபிவிருத்தியானது இந்நாட்டின் பிரதான பொருளாதார வெற்றித் திட்டமாகும். மாறுபடும் சர்வதேச சூழலில் இலங்கையின் ஆடைக் கைத்தொழிலுக்கு உதவக்கூடிய அனேக காரியங்களுண்டு. 1990களின் நடுப்பகுதியின் பின் எமது நாடானது கோட்டா முறையில் ஏற்றுமதி செய்யும் நிலையிலிருந்து வழுவிபோகும் நிலையை காணக்கூடியதாயுள்ளது. பெரும் உற்பத்தியாளர்கள் குறிப்பிட்ட பெயருடைய அதிக பெருமதியான உற்பத்திகளை மாத்திரம் உற்பத்தி செய்து (NICHE) சந்தைக்குள் புகுந்தனர். இச்சந்தர்ப்பத்தின் பிற்பகுதியில் போட்டித்தன்மைகள் கூடுவதனால் இத்தகைய தொழிலானது வரப்போகும் சவால்களுக்கு முகம் கொடுக்க ஆயத்தமாக வேண்டும். இலங்கை நாட்டில் மூலப்பொருள் பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் 85-90% நூல் இழையங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இதனால் வெளியீடு சுற்றானது கூடுவதனால் சராசரி வெளியீட்டு காலமானது வேகமாக கூடிக்கொண்டு போகிறது. இது விசேசமாக எமது போட்டியாளரான சீனாவுடன் ஒப்பிடும் போது காணக்கூடியதாகின்றது. பன்முகப்படுத்தப்பட்ட ஏற்றுமதிச் சந்தையும் கூட ஏற்றுமதியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

எம்முடைய ஆய்வானது இலங்கையின் ஆடைத்தொழிலை எமது போட்டி நாடுகளான சீனாவுடன் ஒத்து நோக்க உதவுகிறது. சீன போட்டியாளரை விட இலங்கையின் தாபனங்கள் பெருமதி கூடப்பட்ட தனிநபருக்கான வருமானவீதமானது குறைவாகவே உள்ளது. இதற்கு சீனத் தொழிலகங்களின் பாரிய முதலீடு ஒரு காரணமாக அமையலாம். நம்பிக்கையான மின்சக்தி இணைப்பிற்கு வழியும், வாடிக்கையளர்களுக்கு குறைந்த விலையில் கிடைக்கக்கூடியதாக உப ஒப்பந்தக்காரர்களும் பிரதான தொழிலாளர் பயிற்சிக்கு கூடிய முதலீடும் சீன நாட்டில் கிடைப்பதால் எமக்கு அது பெரும் போட்டியாக இருக்கிறது.

*இலங்கையின் உல்லாசப் பயணத் தொழிலானது நீடித்தசமாதானத்தின் நன்மையை அனுபவிக்குமொரு தொழிற்துறையாவதோடல்லாது அது ஒரு அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் ஒரு புதிய துறையாகவும் நகர்புற, கிராமிய தொழில்வாய்ப்புக்களையும் கூட்டுகிறதாகவும் உள்ளது.* 1970களில் இவ் உல்லாசத்துறை நல்ல முன்னேற்றத்தை காட்டினாலும் உள்நாட்டு போரினால் முறிந்து போயிற்று. இலங்கையின் உல்லாசத்துறையானது ஊசலாடிக்கொண்டிருந்த வேளை அயல் நாடுகளில் மிக வேகமாக முன்னேறியதை காண்கின்றோம். இன்று இலங்கையின் உல்லாசத்துறையின் வருமானமானது மொத்த ஏற்றுமதியின் 5% க்கும் குறைவாகவும், தாய்லாந்திலும் மொறிசியஸ் நாடுகளில் அவர்களின் ஏற்றுமதியின் 10% ஆகவும் 25% தாகவும் முறையே இருக்கவும் காண்கின்றோம். இவ்வளவு காலமும் உல்லாசத்துறை தெற்கு கடற்கரைகளையொட்டியே நடைப்பெற்ற வேளையிலே வடமத்திய, ஊவா, சப்பிரகமுவ மாகாணங்களின் சத்திகளை கணக்கிலெடுக்கவில்லை.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தால் இத்துறை திரும்பவும் புதுப் பொலிவு பெற்று இந்நாடு பல்வேறு வகையினதான நல்ல ஈர்ப்புகளை உல்லாசப் பயணிகளுக்கு வழங்கி, இத்துறையின் சந்தைப் பெறுமானத்தை கூட்டுகிறது. ஆயினும் முக்கிய தடங்கல்கள் சில இத்துறையின் வளர்ச்சிக்கும் சவாலாயிருக்கின்றன. இவற்றில் பல தடங்கல்கள் நகர்புற பெரும் உற்பத்தி தாபனங்களைப் பாதித்துள்ளன. பாரிய பொருளாதார ஸ்திரமற்ற தன்மை, பொருளாதாரக் கொள்கையின் நம்பகமற்ற தன்மை, கட்டமைப்புக்களின் தரக்குறைவு போன்ற இத் தடங்கல்களே இத்தாக்கத்தை

உண்டுபண்ணுகின்றன. உல்லாசத்துறையின் முழுமையான நன்மைகளைப் பெற அடிப்படைக் கட்டமைப்புகளை மேம்படுத்தி, விசேடமாக கிராமிய பகுதிகளை ஒருங்கிணைத்து அனேக மாகாணங்களும் இதன் மூலம் நன்மையை அனுபவிக்க ஊக்குவிக்க வேண்டும்.

*தகவல் தொழில் நுட்பமானது இலங்கையில் இன்னமும் இளம் பிராயத்திலேயே உள்ளது. ஆயினும் தற்போது மிக வேகமாக வளர்ந்து வருகின்றது.* இன்று தகவல் தொழில்நுட்ப வருமானமானது உள்ளூர் சந்தையினால் மட்டுமே பெறப்படுகின்றது. தகவல் தொழில்நுட்ப தாபனங்கள் தற்போது தங்கள் சேவைகளை வெளிநாடுகளுக்கும் விஸ்தரிக்கின்றன. இது ஒரு நல்ல முன்னேற்றமே ஏனெனில் இச் சந்தை வெளிநாட்டு போட்டியாளர்களுடன் போட்டியிடக்கூடிய அளவிற்கு வளர்ந்துள்ளதைக் காணலாம். எமது ஆய்வுகள் 60% மான தாபனங்கள ஏற்றுமதி தாபனங்களாயும் 30% மான தாபனங்கள் வெளிநாட்டு முதலீட்டையும் பெற்றுள்ளதைக் காட்டுகின்றது. சர்வதேச சந்தையை தனக்கு சார்பாக மாற்றி அதன் நன்மைகளை அனுபவிக்க வியாபார விரிவாக்கலுக்கு எதிரான தடங்கல்களை வெற்றி கொள்ள வேண்டும். எதிரிடையான தடங்கல்கள் (பாரிய பொருளாதார ஸ்திரத் தன்மை), தேர்ச்சி, கல்வி, தொலைத் தொடர்பு வசதிகள் என்பன தகவல் தொழில் நுட்ப ஸ்தாபனங்கள் எதிர் நோக்கும் பாரிய தடங்கல்களாகும். இத்துறையானது நன்கு பயிற்றப்பட்ட ஊழியரிலும், தொலைத் தொடர்பு சாதனங்களிலும் தங்கியுள்ளது ஆச்சரியப்படும் காரியமல்ல. நல்ல வேளையாக அரசானது இத்துறையில் பயிற்சியின் அவசியத்தன்மையை நன்குணர்ந்து இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் முழுமையான பயிற்சிகளை அளிக்க திட்டங்களை வகுத்து தகவல் தொழில்நுட்ப துறைக்கு நல்லதொரு மேடையமைத்துக் கொடுத்துள்ளது.

## முதலீட்டுச் சூழலில், கிராமியத் தாபனங்களுக்கு எதிராக உள்ள விசேடத் தடைகள்

*பிராந்திய சந்தைக்குரிய வழி முறையானது மிகவும் குறுகியதாய் இருப்பதே கிராமிய தாபனங்களுக்கு பெரும் தடையாக உள்ளது.* கிராமிய தாபனங்களின் உற்பத்திக்கு சந்தைக் கேள்வியானது மிகக் குறைவாக இருப்பது தான் இக்குறைப்பாடாகும். இவற்றின் குறைகளானது பலகாரணங்களால் ஏற்படுகின்றன. பெரும் தாபனங்களோடு அல்லது பெரும் வாடிக்கையாளர்களுடன் தொடர்போ அல்லது ஒப்பந்த அடிப்படையில் சேவைகளை வழங்குவதோ கஷ்டமான படியால் அவற்றின் வியாபாரத்தை பன்முகப்படுத்தல் கஷ்டமாயுள்ளது அனேக தாபனங்கள் பொருளாதார தேவைகளை உணரமுடியாமலும் சந்தைப்படுத்தலிலுள்ள பெரும் செலவை ஏற்றுக் கொள்ள இயலாதவையுமாக உள்ளன. முடிவுபெற்ற பொருட்கள் அனேகமாக தரக்குறைவாக இருப்பதால் பெரும் சந்தைகளில் அவற்றிற்கு நல்ல வாய்ப்பில்லாதுள்ளது. தரக்குறைவான போக்குவரத்தும் தொலைத் தொடர்புகளும் கூட சந்தைத் தகவல் பரிமாற்றப் பாதிப்பை உண்டாக்குகின்றன.

*கிராமிய தொழிலகங்களில் குரல் பொதுவாக கேட்கப்படுவதில்லை.* கிராமிய தொழிலகங்கள் திட்ட அமுலாக்கலில் சரியான முறையில் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கவில்லை கிராமிய தொழிலகங்களுக்காக அரசு இன்னும் கூடிய கவனத்தை ஈர்க்கக் கூடிய விதத்தில் அவற்றின் நடவடிக்கைகளை மேம்படுத்த முடியும். அரசுகள் இவ்விடயத்தில் இன்னும் அதிகமாக செய்யலாம். 10% கிராமிய தொழிலகங்கள் மாத்திரமே தமது வியாபார நிலைகளிலும் தாமும் திட்ட அமுலாக்கலிலும் நடைமுறையிலிருக்கும் திட்டத்தை தாக்க முடியுமென நம்புகின்றனர்.

## சாதகமற்ற பகுதிகளில் முதலீட்டுச் சூழல்

இலங்கையில் இரு பகுதிகள் மிகவும் கஸ்டமான பிரதேசங்களாகும்.

போரினால் வடகிழக்கு அபிவிருத்தியில் பாரிய பின்னடைவை சந்தித்துள்ளது. தென் பகுதி அதேநேரம் வறுமைநிலையினால் பாதிக்கப்பட்டுள்ளது.

### *வடகிழக்கு : உள்நாட்டு போரினால் தடைபட்ட முதலீட்டுச் மூடுசூழல்*

உள்நாட்டுப் போரானது வடகிழக்கினது முதலீட்டுச் சூழலுக்கு தடையாக இருந்தது யுத்த காலங்களில் அனேக யுத்தகங்கள் வடகிழக்கில் மாத்திரமே நடந்ததால் இப் பிராந்தியங்கள் அதிகமாக தாக்கப்பட்டன. இப் பகுதியில் வியாபாரமானது வீட்டு வியாபாரமாக இருந்ததோடு கஷ்டங்களினால் முன்னேற்றமடைய இயலாமல் போயிற்று. வடகிழக்கு உற்பத்தி வியாபாரமானது மிக சிறியதாகவும் அனேகமாக குடும்ப உற்பத்தியாகவே காணப்படுவதானது மற்றைய பிராந்தியங்களோடு ஒப்பிடுகையில் வித்தியாசமானது. வட கிழக்கின் உற்பத்தி தாபனங்கள் மொத்த வியாபார தாபனங்களின் 60% மாகவும் மற்றைய இடங்களில் 36% மாகவும் இருக்கின்றது. இது எதைக்காட்டுகிறது என்றால் உற்பத்தியாளர்கள் மற்றைய வியாபார நிலைகளில் முதலிட தயக்கம் கொண்டவர்களாக இருப்பதும், தாம் போட்டியில் தோற்று போவோம் என்ற பயமும், வியாபாரத்தை விட்டு போக வேண்டும் என்ற பயமுமேயாகும்.

பாதுகாப்பின்மையானது ஒரு பாரிய சுமையாக சுமத்தப்பட்டுள்ளது. மற்றய இடங்களில் 1 முதல் 2% மாக நட்டங்கள் இருக்கையில் வடகிழக்கிலுள்ள தாபனங்கள் 20% மானபெரும் நட்டத்தை குற்றங்களினாலும் குழப்பத்தினாலும் சென்ற வருடம் சந்தித்துள்ளன. கட்டமைப்புகள் யுத்தகாலத்தில் அழிக்கப்பட்டு போயின. மற்ற இடங்களை போலல்லாது அனேக வட கிழக்கின் தாபனங்கள் பொது கட்டமைப்புகள் தமக்கொரு தடையாக இருப்பதாக எண்ணுகின்றனர்.

### *தெற்கு: வறுமையும் சேவைக்குறைபாடும்*

*தெற்கின் வறுமையும் மோசமான சேவைகளளிப்பும் :* வடகிழக்கின் வறுமை நிலைப்பற்றிய குறிப்பில்லாத படியால் அவற்றை விடுத்து மற்றைய பிரதேசங்களை நோக்கும் போது ஊவா மாகாணமும், சப்பிரகமுவ மாகாணமும் கூடிய வறுமை நிலையை கொண்டுள்ளன. தற்போதுள்ள தரவுகளின் படி ஊவா மாகாணமானது மிகக்குறைந்த கிராமிய உற்பத்தித் தளத்தைக் கொண்டுள்ளன. ஊவாவின் அரைப்பங்கான தாபனங்கள் வியாபார நிலையங்ளேயாகும். இவற்றிற்கு உற்பத்தித் தாபனங்களைப் போல பாரிய முதலீடு அவசியமல்ல. ஊவாவில் குறைந்த வருமானம் பெறுவோர் விவசாய உற்பத்தயில்லாத காலங்களில் தம்மைத்தாங்க வீட்டு வியாபார நிலைகளை நடாத்தி காலத்தை கழிக்கின்றனர். மற்ற பிராந்தியங்களைவிட ஊவாவிலுள்ள தாபனங்கள் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. மின்சக்தியை பாவிக்கும் தாபனங்கள் இலங்கையில் 69% மாக இருக்கையில் ஊவாவில் அதன் பாவிப்பு 62% வீதமாகவேயுள்ளது. இங்குள்ள கிராமியதாபனங்கள் தனிமைபட்டனவாயும் வியாபாரத்திற்கான வழிகளும் குறைவாகவேயுள்ளன.

## முடிவுரையும் சிபாரிசுகளும்

*இந்நாட்டின் சிறந்த மூலதன முதலீட்டு சூழலை மேம்படுத்த நிலையான சமாதானம் மிக அத்தியாவசியமாகிறது.* இவ்வாய்வானது நாம் கவனம் செலுத்த வேண்டிய மற்றைய பகுதிகளையும் வெளி கொணர்ந்துள்ளது. கிராமிய நகர்புற முதலீட்டுச் சூழலிலுள்ள வேறுபாடுகளைக் களைதல் பெரும் பயன் தரும். இது கிராமிய தொழில் வாய்ப்புக்களையும், வருமானத்தைக் கூட்டுவதோடு, பிராந்தியங்களுக்கிடையிலுள்ள பாரிய வேறுபாடுகளை களையவும் உதவும். முதலீட்டுச் சூழலை முன்னேற்ற எடுக்க வேண்டிய 5 காரணிகளைப் பார்ப்போம்.

### *மின்சக்தியும் போக்குவரத்தும் (நகர்புற, கிராமிய தாபனங்கள்) தரமானதாகப்பெற உதவுதல்*

மின்சக்தி, போக்குவரத்து பெறுவதில் சிறந்த வழிமுறைகளை வகுத்தலும் தரத்தைக் கூட்டலும் (நகர்புற, கிராமியத் தாபனங்கள்). இலங்கை மின்சார சபை மறுசீரமைப்பிற்கான மின் சீர்திருத்த சட்ட

ஆக்கம் (ERA 2002ம் ஆண்டின்), பொதுச் சேவைகள் ஆணைக்குழு நிறுவுதல் போன்ற முக்கிய முன்னேற்ற மறுசீரமைப்புகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன. சட்டங்களை சட்ட வரைவிற்குள் நடைமுறைப்படுத்தலானது முதல் இடத்தை வகிக்கவேண்டும். இடைக்காலங்கள் வரையில் போட்டியை இது ஊக்குவிக்கும். தாபனங்கள் தமக்கிடையே ஏற்படுத்தும் வியாபாரத் தொடர்பினால் தரமான பொருள் உற்பத்திக்கு ஊக்கமளிக்கும். வெளிப்படையானதும், திறன் மிக்கதுமான மானிய உதவித்திட்டமானது கிராமிய பகுதிகளில் மின் பாவிப்பை ஊக்குவிக்கும்.

தற்போதுள்ள நிலையில் நல்ல பாதைகள் இல்லாதது பிரதான தடையாக இருப்பது மட்டுமல்லாது அது புதிதாக ஒரு தாபனத்தை துவக்கவோ அல்லது விவசாயமல்லாத தொழில்களில் ஈடுபடுத்தவோ தடையாய் உள்ளது. பாதைகள் சீர்த்திருத்த செயற்திட்டத்தில் (i) பாதைகள் பராமரித்தலுக்கும், மறுசீரமைத்தலுக்கும் போதுமான நிதியினை ஒதுக்குதல் (ii) பிரதானமாக பராமரிக்க வேண்டிய பாதைகளை தெரிதல் (iii) முழுவதற்குமான ஒரு மதிப்புத் திட்டத்தை வரைதல் (iv) திட்டமிடுதல், நடைமுறைப்படுத்தல் நிலைகளை பெறுப்பேற்கும் முகவர் நிலையங்களின் ஆற்றலைத் திடப்படுத்துதல் போன்ற காரியங்களின் மூலம் வெற்றி காணலாம்.

## *நிதி பெறும் செலவைக் குறைத்தலும் அவற்றைப் பெறும் வழிகளை மேம்படுத்தலும் (நகர்புற, கிராமிய நிறுவனங்களுக்கு)*

*இலங்கையில் நிதி பெறும் செலவைக் குறைப்பதற்கு நிலையான பாரிய பொருளாதார நிலையும் அதோடு இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகிய இரு அரச வங்கிகளை மறுசீரமைத்தலும் அவசியமாகிறது.* நிதித் துறையில் அரசு சந்திக்க வேண்டிய மற்றைய நிதி திட்டமானது கடன்களை மீளப்பெறல் தொழிற்பாடாகும். கடன் தகவல் நிலையத்தை மேம்படுத்தி சிறிய நிதித்தாபனங்களின் கட்டுப்பாடுகளை அபிவிருத்தி செய்வதனாலும் கட்டாய சேமிப்புக்களையும் புனரமைக்கலாம்.

## *தொழிற்சந்தை நெகிழ்வு தன்மையை மேம்படுத்தல் (நகர்புற நிறுவனங்களுக்கு)*

*சென்ற வருடம் அரசு தொழிற் சட்டங்களை புனரமைக்க முயற்சித்தது அதன் விபரங்கள் இன்னமும் விவாத நிலையிலேயே உள்ளன.* அதன் சரத்துக்கள் பின்வரும் காரியங்களை உள்ளடக்கும். (i) தொழிலாளர்களை வேலை நீக்குகையில் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள். (ii) தொழில் வழக்குகளை குறித்த கால எல்லைக்குள் தீர்த்தல். (iii) வேலையற்றோருக்கு உதவ ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தல் (UBS). இத்துடன் வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஊக்குவிக்கும்படிக்கு (FDI) தொழிலாளரை பகிர்ந்தளிக்கும் விதத்தை திறனுள்ளதாகவும், வழமையான தொழில் வாய்ப்புக்களை அபிவிருத்தி செய்யவும், இலங்கையின் அதிகசெலவாகும் வேலைநீக்கும் சட்டதிட்டத்தை நவீன உலக சந்தைக்கேற்றபடி மாற்றலும், போதுமானதும் பாரபட்சம் அற்றதுமான உதவி வேலையற்றோருக்கு வழங்குவதன் மூலமும் அடையவேண்டும். இலங்கையின் தற்போதய சூழ்நிலையில் இவ் வேலையற்றோர்களுக்கு உதவிசெய்யும் திட்டமானது கட்டாயமாக வேலையற்றோருக்கான காப்புறுதியாக இருக்க முடியாது.

## *பாரிய சந்தைக்கு வழிவகைகளை மேம்படுத்தல் (கிராமிய நிறுவனங்களுக்கு)*

*வியாபார கழகங்கள், உள்ளூர் வர்த்தக சங்கங்கள் கிராமிய தொழிலகங்களுகளின் சந்தையை விஸ்தரிக்கவியலும்.* (i) வியாபார சந்தைகளை ஏற்படுத்தி வெவ்வேறு சந்தை நிலைகளின் கொள்வனவு விதிகள், வாடிக்கையாளர் நோக்கங்களுக்கு அவர்களை அறிமுகஞ்செய்தல் (ii) வியாபார விபரக் கோவையை உண்டாக்க உதவுதல் (iii) பெறுமதியைக் கூட்டும்படிக்கு சந்தை விலைகளின்

நோக்கத்தை தெரியப்படுத்தியும், தரத்தையும், தரமான பொருளுற்பத்திக்காக தொழில்நுட்ப, நிதி வளங்களை அறிமுகப்படுத்தி உற்பத்திப் பொருட்களின் பெறுமதியைக் கூட்டல் போன்ற காரணிகளை மேம்படுத்தி கிராமிய நிறுவனங்களுக்கு சந்தைக்கான வழிகளைக் விஸ்தரிக்கலாம். குழுக்களாக சந்தைப்படுத்தல் மூலமும் (சங்கங்கள், கூட்டுறவு போன்ற) வியாபார கூட்டுக்கள் மூலமும், கிராமிய தாபனங்கள் பொருளாதார பலனைப் பெறலாம். இவ்வூக்கம் மற்றைய கிராம கட்டமைப்புகளையும் திறனாக்குவதன் மூலம் தரத்தையும், உற்பத்தியையும் உயர்த்தி இத்தாபனங்களின் எல்லைகளை விரிவாக்கலாம்

## *நகர்புற தாபனங்களின் நன்மைக்காக திட்ட அமுலாக்க நம்பிக்கைத்தன்மையையும் பாரிய பொருளாதார ஸ்திரத்தன்மையையும் மேம்படுத்தல்*

*செயற்திட்ட அமுலாக்கலிலுள்ள நம்பிக்கையற்றதன்மையும் பாரிய பொருளாதார ஸ்திரமற்ற தன்மையும் நகர்புற தொழிலகங்கள் மேல் ஒரு பாரிய எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துமென ஆய்வுகள் காட்டுகின்றன.* நிதிப்பற்றாக்குறையையும், பொது படுகடன்களின் அளவைக் குறைத்தும், மேன்மைப்படுத்தப்பட்ட வரி முகாமைத்துவத்தின் மூலமும் வருமானம் பெறும் வழிகளை ஸ்திரப்படுத்தி, பொது சேவைகளை மறுசீரமைத்து சம்பளத்திற்கு செலவழித்தலைக் குறைத்தும், அரச தாபனங்களில் ஏற்படும் நட்டத்தைக் குறைத்தும் இந்நிலையை எய்தலாமென்ற கருத்தை முன்வைக்கின்றோம்.

---

**குறிப்பு**

1. ஆய்விற்காக விவசாயம் அல்லாத தபனங்கள் என்னும் பொழுது கிராமங்களில் விவசாயத்தைத் தவிர வியாபாரம், உற்பத்தி அல்லது சேவைகள் மூலம் பெறப்படும் வருமானத்தைக்குறிக்கும். ஆயினும் இவை விவசாய உற்பத்தி, கால் நடை உற்பத்தி, மீன்பிடித்துறை போன்றவற்றின் மூலம் (வீட்டுத்துறையும் வீட்டுத்துறையல்லாத) பெறப்படும் வருமானம் தவிர்தவை. ஏதேனும் பெறுமதி கூட்டப்பட்ட பொருட்களினின்று கிடைக்கப்படும் வருமானமும் கிராமிய விவசாயமல்லாத வருமானமாக கணிக்கப்படும்.